ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 3.4 – புகழுநல் ஒருவன்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.4 – புகழுநல் ஒருவன்

‡ புகழும் நல் ஒருவன் என்கோ ! ⋆
பொருவில் சீர்ப் பூமி என்கோ ⋆
திகழும் தண் பரவை என்கோ ! ⋆
தீ என்கோ ! வாயு என்கோ ⋆
நிகழும் ஆகாசம் என்கோ ! ⋆
நீள் சுடர் இரண்டும் என்கோ ⋆
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ ⋆
கண்ணனைக் கூவும் ஆறே ! ‖ **3.4.1** ‖

கூவும் ஆறறிய மாட்டேன் ⋆
குன்றங்கள் அனைத்தும் என்கோ ⋆
மேவு சீர் மாரி என்கோ ! ⋆
விளங்கு தாரகைகள் என்கோ ⋆
நாவியல் கலைகள் என்கோ ! ⋆
ஞான நல் ஆவி என்கோ ⋆
பாவு சீர்க் கண்ணன் எம்மான் ⋆
பங்கயக் கண்ணனையே ! ‖ **3.4.2** ‖

பங்கயக் கண்ணன் என்கோ ! ⋆
பவளச் செவ்வாயன் என்கோ ⋆
அம் கதிர் அடியன் என்கோ ! ⋆
அஞ்சன வண்ணன் என்கோ ⋆
செம் கதிர் முடியன் என்கோ ! ⋆

திரு மறு மார்வன் என்கோ ⋆
சங்கு சக்கரத்தன் என்கோ ! ⋆
சாதி மாணிக்கத்தையே ! ‖ **3.4.3** ‖

சாதி மாணிக்கம் என்கோ ! ⋆
சவி கோள் பொன் முத்தம் என்கோ ⋆
சாதி நல் வயிரம் என்கோ ⋆
தவிவில் சீர் விளக்கம் என்கோ ⋆
ஆதியம் சோதி என்கோ ! ⋆
ஆதியம் புருடன் என்கோ ⋆
ஆதும் இல் காலத்தெந்தை ⋆
அச்சுதன் அமலனையே ! ‖ **3.4.4** ‖

அச்சுதன் அமலன் என்கோ ⋆
அடியவர் வினை கெடுக்கும் ⋆
நச்சுமா மருந்தம் என்கோ ! ⋆
நலம் கடல் அமுதம் என்கோ ⋆
அச்சுவைக் கட்டி என்கோ ! ⋆
அறு சுவை அடிசில் என்கோ ⋆
நெய்ச் சுவைத் தேறல் என்கோ ! ⋆
கனி என்கோ ! பால் என்கேனோ ! ‖ **3.4.5** ‖

பால் என்கோ ! ⋆
நான்கு வேதப் பயன் என்கோ ⋆
சமய நீதி நூல் என்கோ ! ⋆
நுடங்கு கேள்வி இசை என்கோ ! ⋆
இவற்றுள் நல்ல மேல் என்கோ ⋆
வினையின் மிக்க பயன் என்கோ ⋆

கண்ணன் என்கோ ! மால் என்கோ ! மாயன் என்கோ ⋆
வானவர் ஆதியையே ! ॥ **3.4.6** ॥

வானவர் ஆதி என்கோ ! ⋆
வானவர் தெய்வம் என்கோ ⋆
வானவர் போகம் என்கோ ! ⋆
வானவர் முற்றும் என்கோ ⋆
ஊன மில் செல்வம் என்கோ ! ⋆
ஊன மில் சுவர்க்கம் என்கோ ⋆
ஊன மில் மோக்கம் என்கோ ! ⋆
ஒளி மணி வண்ணனையே ! ॥ **3.4.7** ॥

ஒளி மணி வண்ணன் என்கோ ! ⋆
ஒருவன் என்றேத்த நின்ற ⋆
நளிர் மதிச் சடையன் என்கோ ! ⋆
நான்முகக் கடவுள் என்கோ ⋆
அளி மகிழ்ந்துலகம் எல்லாம் ⋆
படைத்தவை ஏத்த நின்ற ⋆
களி மலர்த் துளவன் எம்மான் ⋆
கண்ணனை மாயனையே ! ॥ **3.4.8** ॥

கண்ணனை மாயன் தன்னைக் ⋆
கடல் கடைந்தமுதம் கொண்ட ⋆
அண்ணலை அச்சுதனை ⋆
அனந்தனை அனந்தன் தன் மேல் ⋆
நண்ணி நன்குறைகின்றானை ⋆
ஞாலம் உண்டுமிழ்ந்த மாலை ⋆

எண்ணும் ஆறறிய மாட்டேன் ⋆
யாவையும் யவரும் தானே ‖ **3.4.9** ‖

யாவையும் யவரும் தானாய் ⋆
அவர் அவர் சமயம் தோறும் ⋆
தோய்விலன் புலன் ஐந்துக்கும் ⋆
சொலப்படான் உணர்வின் மூர்த்தி ⋆
ஆவி சேர் உயிரின் உள்ளால் ⋆
ஆதும் ஓர் பற்றிலாத ⋆
பாவனை அதனைக் கூடில் ⋆
அவனையும் கூடலாமே ‖ **3.4.10** ‖

‡ கூடி வண்டறையும் தண் தார்க் ⋆
கொண்டல் போல் வண்ணன் தன்னை ⋆
மாடலர் பொழில் ⋆
குருகூர் வண் சடகோபன் சொன்ன ⋆
பாடல் ஓர் ஆயிரத்துள் ⋆
இவையும் ஒரு பத்தும் வல்லார் ⋆
வீடில போகம் எய்தி ⋆
விரும்புவர் அமரர் மொய்த்தே ‖ **3.4.11** ‖

அடிவரவு — புகழும் கூவு பங்கய சாதி அச்சுதன் பால் வானவர் ஒளிமணி கண்ணனை யாவையும் கூடி மொய்

புகழுநல் ஒருவன் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்